**சமுர்த்தி நுண்நிதி எழுதுகருவிகள் சுழற்சி நிதியம் - 2017**

---

சமுர்த்தி நுண்நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும நுண்நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 07 இன் பிரகாரம் உபகரணங்களுக்குச் சமனான மதிப்பிற்கு பெறுமானத் தேய்வு ஒதுக்கம் செய்யப்படும் போது அச் சொத்தின் கொண்டு செல்லும் மதிப்பு தீர்மானிக்கப்பட்டு கணக்கிடப்படுவதற்கு அல்லது புத்தகங்களில் பதிவளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த கொள்வனவு விலை ரூபா 119,963 ஆன அலுவலக உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியம இலக்கம் 09 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக்களை அளவிடும்போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையானது நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 193,372 ஆன அச்சிடப்பட்ட எழுதுகருவிகளுக்காகத் தேவையான ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எழுது கருவிகள் விநியோகம் முறையாக இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்படிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் எழுதுகருவிககள் இருப்புப் பேரேட்டின் பெறுமதி ரூபா 40,200,203 ஆகவும் களஞ்சியசாலை இருப்புக் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 46,803,933 ஆக இருந்தது. இந்த இருப்பு மீதிகள் இரண்டினதும் வேறுபாடு ரூபா 6,603,730 ஆனது நிதிச் செயலாற்றல் கூற்றில் எழுதுகருவிகள் விற்பனை வருமானமொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

2017 திசெம்பர் 31 இல் 7 மாவட்டச் செயலகங்களுக்கான ரூபா 3,719,440 ஆன இருப்பு மிகுதி தொடர்பான இருப்பு கணிப்பீட்டு அறிக்கை மற்றும் ரூபா 1,452,189 இற்கான கடன் பட்டியல் பத்திரங்கள் கணக்காய்விறகுச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச மக்கள் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 633(1) | அரச அச்சகத்தினால் அச்சடிக்கும் பணிகளைப் பொறுப்பேற்று செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அரச அச்சகத்தினால் விலை மனுக்கள் கோரப்பட்டு அப்பணி தனிப்பட்ட நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். இருந்தபோதிலும் பிரமாணங்களுக்கு முரணாக மீளாய்வாண்டின் அச்சிடல் நடவடிக்கைகள் தனிப்பட்ட நிறுவத்தினால் மேற்கொள்ளப்பட்டு ரூபா 56,020,270 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டி | குறைந்த பட்சம் 03 வருடத்திற்குத் தேவையான பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைத் திட்டத்தில் பட்டியல் இடப்பட வேண்டியதுடன் குறிப்பட்ட வருடத்திற்கான விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு ஒருமுறை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் எழுதுகருவிகள் கொள்வனவிற்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தி | நியதிச் சட்டமல்லாத நிதியமொன்று தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கூறப்பட்ட போதிலும் நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது வங்கி முகாமைத்துவச் சபையின் நிதியம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. |

**2.4 பெறவேண்டிய கணக்கு**

இலங்கை சலுசலா நிறுவகத்திற்கு உரித்தான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த எழுதுகருவிகள் இருப்பு 2010 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட களஞ்சியசாலைக்கான வாடகை வைப்பு ரூபா 1,454,112 ஐ மீண்டும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 16,507,651 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 23,314,160 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,806,509 ஆன பின்னடைவொன்று காட்டப்பட்டிருந்தது. இப்பின்னடைவிற்கு நிதியத்தின் எழுதுகருவிகள் விற்பனை இலாபம் ரூபா 10,943,583 ஆல் குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

களஞ்சியசாலைக்குப் பொருத்தமான நியமமொன்று இன்றி எழுதுகருவிகள் களஞ்சியசாலைக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை மற்றும் முறையற்ற விதத்தில் இருப்புக்கள் களஞ்சியப்படுத்தபபட்டிருந்ததுடன் 2017 மே 18 இல் ஏற்பட்ட சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக களஞ்சியசாலையில் நீர் நிறைந்தமையால் ரூபா 5,411,721 பெறுமதியான 45 வகையான இருப்புக்களில் 602,750 இருப்பு விடயங்கள் அழிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு அழிக்கப்பட்டிருந்த எழுதுகருவிகள் இருப்பு தொடர்பாக 2021 திசெம்பர் மாதம் கணக்காய்வுத் திகதி வரையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2021 நவம்பர் 19 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் நிதியத்தின் 4.1 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் பிரகாரம நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளை நிறுவி கணக்குப் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்கான விசேட கவனம் கோரப்படுகின்றது.